# நேஷன்ஸ் கிட்ஸ் கணக்கு நியதிகளும் நிபந்தனைகளும்

1. நேஷன்ஸ் கிட்ஸ் கணக்கு (கணக்கு) பெற்றோரிடமிருந்து (பெற்றோர்களிடமிருந்து)/சட்டரீதியாக நியமிக்கப்பட்ட பாதுகாவலரிடமிருந்து (பாதுகாவலர்களிடமிருந்து) கிடைக்கப்பெற்ற அறிவுறுத்தல்களின் மீதும் நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சி (வங்கி) மூலம் வேண்டப்பட்ட ஆவணங்களை சமர்ப்பிப்பதன் மீதும் பராயமடையாதவரின் பெயரில் (“கணக்கு வைத்திருப்பவர்”) வைப்புப் புத்தக கணக்கொன்றாக மாத்திரம் திறக்கப்பட முடியும்.
2. கணக்கிற்கு ஏற்புடைய நியதிகள் மற்றும் நிபந்தனைகள், ஆரம்ப வைப்பு, குறைந்தபட்ச்ச மீதி, வட்டி வீதம் மற்றும் கணிக்கும் முறை அத்துடன் கணக்கிற்கு வட்டியினை வரவுவைத்தல் என்பன வங்கியின் தற்போதய விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கமைவாக அமைந்திருக்கும். வங்கி, காலத்திற்கு காலம் விதிகளையும் ஒழுங்குவிதிகளையும் அதன் ஏக தற்றுணிபில் மாற்றுவதற்கான / திருத்துவதற்கான உரமையினைக் கொண்டிருக்கும்.

   வேண்டப்பட்ட குறைந்பட்ச மீதி பேணப்படவில்லையாயின், கணக்கினை மூடுவதற்கான உரிமையினையும் வங்கி கொண்டுள்ளது.

3. கணக்கு வைத்திருப்பவர், ஏற்புடைய சட்டத்தினால் நிர்ணயிக்கப்பட்டவாறு பாரயமடையும் வயதை அடைந்தவவுடன், கணக்கினை சாதாரண சேமிப்புக் கணக்கொன்றாக மாற்றுவதற்கு வங்கியினால் வேண்டப்பட்ட ஆவணங்களை கணக்கு வைத்திருப்பவர் சமர்ப்பிக்கும் வரையிலும் அத்துடன் சமர்ப்பித்தாலன்றி, கணக்கானது முடக்கப்பட்டிருக்கும் என்பதுடன் கொடுக்கலவாங்கல் எதுவும் கணக்கின் மீது அனுமதிக்கப்படாது.

4. கணக்கினை ஆரமபித்த பெற்றோரிடம்(களிடம்)/பாதுகாவலரிடம்(களிடம்) வைப்புப் புத்தகம் வழங்கப்படும், அதனைப் பாதுகாப்பாக வைத்திருப்பது பெற்றாரின்(களின்)/பாதுகாவலரின்(களின்) பொறுப்பாகும். வைப்புப் புத்தகம் தொலைந்தால், களவாடப்பட்டால், இடந்தவறி வைக்கப்பட்டால், எழுத்து மூலம் வங்கிக்கு அறிவிக்கப்பட வேண்டும். வைப்புப் புத்தகம் தொலைந்ததன் விளைவாக உறப்பட்ட ஏதேனும் நட்டத்திற்கு, சேதங்களுக்கு, செலவுக்கு ( ஏதேனும் சட்டச் செலவுகள் உள்ளடங்கலாக) அல்லது கோரிக்கைகளுக்கு எதிராக வங்கிக்கு நட்டோத்தரவாதமளிப்பதற்கு பெற்றார்(கள்)/பாதுகாவலர்(கள்) பொறுப்பேற்கின்றனர்.

5. கணக்கிற்கு செய்யப்பட்ட வைப்புகளின் பயன்பெறுநர் கணக்கு வைத்திருப்பவராகும். கணக்கு வைத்திருப்பவர் பராயமடைவதற்கு முன்னர் கணக்கிலிந்து மீளெடுப்புகள், வங்கியினால் நிர்ணயிக்கப்பட்டவாறு கணக்கு வைத்திருப்பவரின் இக்கட்டான தேவைப்பாடுகளுக்காக மாத்திரம் அனுமதிக்கப்படும்.

6. கணக்கு வைத்திருப்பவர் மரணமடைகின்ற சந்தர்ப்பத்தில், ஏற்புடைய சட்டத்திற்கமைவாக கணக்கிலுள்ள பணம் பகிர்ந்தளிக்கப்படும்.

7. கணக்கு வைத்திருப்பவர் பராய வயதை அடைவதற்கு முன்னர் வங்கிக் கணக்கு மூடப்பட வேண்டுமாயின், வட்டி வீதமானது வங்கியின் ஏக தற்றுணிபில் நிர்ணயிக்கப்படும்.

8. வங்கியினால் வேறுவகையில் நிர்ணயிக்கப்பட்டாலன்றி, கணக்கிற்கான வைப்புகளும் கணக்கிலிருந்தான மீளெடுப்புகளும் கணக்கு ஆரம்பிக்கப்பட்ட வங்கிக் கிளையில் மாத்திரம் அனுமதிக்கப்பட்டுள்ளன.

9. வங்கியினால் நிர்ணயிக்கப்படும் அத்தகைய நியதிகள், நிபந்தனைகளின் மீது கணக்கு வைத்திருப்பவர்களுக்காக வங்கி பரசுத் திட்டமொன்றை வழங்கலாம். அத்தகைய பரிசுத் திட்டத்தினை அறிவித்தலின்றி அதன் தற்றுணிபில் இரத்துச் செய்வதற்கு / திருத்தவதற்கு வங்கி உரிமையினைக் கொண்டுள்ளது.

   பரசுத் திட்டத்துடன் தொடர்புடைய நியதிகளுடன் மற்றும் நிபந்தனைகளுடன் இணங்காமையின் காரணமாக ஏற்கனவே வழங்கப்பட்ட ஏதேனும் அத்தகைய பரிசின் பெறுமதியினை அல்லது செலவினை எந்நேரத்திலும் அறவிடுவதற்கும்(கணக்கில் பற்றுவைப்பதன் மூலம்) வங்கி உரிமையினைக் கொண்டுள்ளது.

10. கணக்கு கொடுக்கல்வாங்கல்கள், ஏற்புடைய அரசாங்க வரிகளுக்குட்பட்டிருக்கும்.

11. இவ் வகையான கணக்குகளின் கீழ் வங்கி நம்பிக்கைப்பொறுப்புகளை ஏற்றுக்கொள்ளாது அல்லது அங்கீகரிக்காது

12. இந் நியதிகளைத் மற்றும் நிபந்தனைகளைத் திருத்தவதற்கு வங்கி உரிமையினைக் கொண்டுள்ளது. அது தொடர்பிலான அறிவித்தல், வங்கியின் நிறுவன இணையத்தளம், குறுந்தகவல் ஊடான செய்திகள் வாயிலாக, வங்கியின் டிஜிடல் வழிகள் ஊடாக அத்துடன்/அல்லது வங்கியினால் தீர்மானிக்கப்பட்ட ஏதேனும் வேறு தொடர்பாடல் வழிமுறைகள் ஊடாக வழங்கப்படும்.

13. இந் நியதிகளும் நிபந்தனைகளும் இலங்கையிலுள்ள சட்டங்களினால் ஆளப்படுவதுடன் இலங்கையிலுள்ள சட்டங்களுக்கு அமைவாக பொருள்கொள்ளப்படும்.

அத்தகைய உற்பத்தி(கள்)/சேவை(கள்) தொடர்பிலான விவரங்களுடன் சேர்த்து இவ் உடன்படிக்கையின் நியதிகளின் கீழ் நான்/நாங்கள் விண்ணப்பித்துள்ள உற்பத்திக்கு(களுக்கு)/சேவைக்கு(களுக்கு) ஏற்புடைய நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சி யின் பொதுவான தொழில் நிபந்தனைகள் மற்றும் வேறு நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் பிரதிகள், இது தொடர்பில் நாம் கையொப்பமிடுவதற்கு முன்னர் எனக்கு தரப்பட்டு விளக்கப்பட்டன என்றும் அதில் உள்ளடங்கியுள்ள நியதிகளின் மற்றும் நிபந்தனைகளின் விவரங்களை நாள்/நாங்கள் வாசித்து விளங்கிக்கொண்டோம் என்றும் அதன் மூலம் பிணிக்கப்பட்டிருப்பதற்கு உடன்பட்டு சம்மதிக்கின்றேன்/ சம்மதிக்கின்றோம் என்றும் இத்தால் நான் நாங்கள் உறுதிப்படுத்துகின்றேன்/உறுதிப்படுத்துகின்றோம்.

................................................ ................................................................

பெற்றோரின்/ பாதுகாவலரின் கையொப்பம் திகதி